ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

16.01.2025

1. மக்களை நோக்கி மகத்துவம் புரிய
மகான் அரங்கன் யானும் இனிதே
ஆக்கமுடன் சரவண சோதியாகி
அழைக்க அக்கணமே அருளி வருக

2. அருள் பெற பிரணவக் குடிலுக்கு
அழைப்புத் தந்து அரங்கன் தானும்
அருளாசியை குரோதி கலை திங்கள்
அருளுவேன் முதல் குருவார ஆசியாக

3. ஆகவே அவதார தின விழா எடுத்த
அன்பர் பெருங்கூட்டங்களுக்கு
மகான் அரங்கனும் மகிழ்ந்து ஆசி
மக்களெல்லாம் நன்மை காண உரைப்பேன்

4. உரைக்கவே எந்தன் பெருமைதனை
உணர்ந்து சரணாகதி கண்டிட
குறைவிலாப் பெருவாழ்வு தன்னை
குருவரங்கன் யானும் தருவேன்

5. தருவேன் என் மக்களெல்லாம்
தாராள தனபுழக்கம் பெற
தருமத்தை தடையின்றி செய்ய
தானவர்கள் குடி மேன்மேலும் உயர

6. உயரவே அரங்கனும் அருள்வேன்
உண்மை ஞானமும் பெற்றிட
தயவாய் அவரவர் வேண்டலில்
தசவாசல் திறவாய் அருளி

7. அருளியே அப்பன் சுப்பனோடு
அரங்கன் என்னை வள்ளலை
வரமாகக் கண்டிடவும் அருள்வேன்
வருங்காலம் ஞானசித்தர் காலம்

8. காலமாக மாற்றம் செய்கின்ற
கலியினில் ஞானப்படைகளாக
கோலமதாய் அரங்கன் என் மக்களே
குறைவின்றி தேர்வாக இருக்க

9. இருக்கவே உலக மாற்றத்தில்
என் மக்கட்கே பங்கு உண்டு
கருத்தாக அன்னதனால் மக்கள்
கட்டாயம் பிரணவக் குடில் நோக்கி வந்து

10. வந்துமே சோதி வடிவான என்னை
வணங்கி தருமத்தில் உதவி
சிந்தைபட தீட்சைகளும் ஏற்று
செப்பிடுவேன் கிளைச்சங்கங்களும்

11. சங்கங்களும் தருமம் வளர்க்க
சடுதி அற்புதம்தன்னை உலகம்
ஓங்காரன் மகிமைபட அடையும்
ஓதிவந்த குருவரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி